**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், லோறன்ஸ்கூக்**
**ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, LØRENSKOG**
**ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, LØRENSKOG**

# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 39 - 2023*

**கல்வி - 30.09.2023 சனிக்கிழமை - 09:30 -12:30 (10:45 - 11:15)**

கடந்த வாரம் எமது வளாகத்தில் தியாக தீபம் திலீபனின் நினைவுக் கண்காட்சியை சிறப்பாக வழிநடத்திய தமிழர் இளையோர் அமைப்பினருக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, பாடசாலைக்கு நேரடியாக வருகைதந்து எமது மாணவர்களுக்கு விளக்கத்துடன் கண்காட்சியைச் சிறப்பாக நடாத்திய இளையோருக்கும் நன்றியுடன் வாழ்த்துகளும் பாராட்டுகளும்.

**முக்கிய குறிப்பு:** *வளாகத்தில் எந்த ஒரு நிகழ்வுபற்றி அறிவித்தல் வெளியிடுதல், நிகழ்வுசார்ந்த பதிவுகளை வெளியிடுதல் அல்லது வளாகத்தின் பெயரைப் பயன்படுத்துதல் ஆகியவற்றைச் செய்யமுன் நிர்வாகத்தின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்பதனை மீண்டும் மீண்டும் நினைவூட்டுகின்றோம்.*

**அனைத்துலக அறிவாடல் போட்டி 2023**

தேசிய மட்டத்திலான போட்டி நடைபெறும் நாள் 01.10.2023.
இப்போட்டியில் பங்குகொள்ளவிருக்கும் மாணவர்களுக்குப் போட்டி பற்றிய மேலதிகத் தகவல்கள் தனிப்பட்டமுறையில் அனுப்பிவைக்கப்படும். இப்போட்டியில் தெரிவாகும் மாணவர்களுக்கான இறுதிப்போட்டி 21.10.2023 ஆக திட்டமிடப்பட்டுள்ளது. மாற்றங்கள் இருப்பின் அறியத்தரப்படும்.

**கலைவகுப்புகள் - 30.09.2023 சனிக்கிழமை** - வழமைபோல் நடைபெறும்.
மாற்றங்கள் இருப்பின் கலை ஆசிரியர்கள் தங்களுக்கு நேரடியாக அறிவிப்பார்கள்.
நவராத்திரி விழா 2023 இற்கான அழைப்பிதழ் இணைக்கப்பட்டுள்ளது.
நவராத்திரி விழாவிற்கான மாணவர்களின் நிகழ்ச்சிக்குத் தேவையான வழிகாட்டலைச் செய்ய முன்னாள் கலைப்பொறுப்பாளர் உதவுவதற்கு ஒப்புதல் தந்துள்ளார். அவருக்கு எமது நன்றி.

**தேநீர்ச்சாலை** - இயங்குநிலையில் இருக்கும்.
***பெற்றோர் மற்றும் பாதுகாவலரின் முக்கிய கவனத்திற்கு!***
தாங்கள் தாங்கள் பயன்படுத்திய உணவுப்பொருட்கள் மற்றும் தேநீர்க் குவளைகள் அனைத்தையும் குப்பையிலிட்டு இடங்களைச் சுத்திகரித்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## நிதி 2023

அன்னையினால் தனிப்பட்ட முறையில் அனுப்பப்பட்ட அங்கத்துவக் கட்டணத்தினை சிலர் இன்னும் செலுத்தவில்லை என்ற தகவல் கிடைத்துள்ளது. எனவே இதுவரை செலுத்தாமல் இருந்தால் அதனை விரைவில் செலுத்தும்படி வேண்டிக்கொள்கின்றோம். ஐயப்பாடுகள் இருப்பின் நிதிப்பொறுப்பாளருடன் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும். jude@annai.no

## எமது வளாக இக்கல்வியாண்டில் (2023 - 2024) நடைபெறவுள்ள நிகழ்வுகள்

நவராத்திரி விழா 2023 - 28.10.2023
நத்தார்விழா - 16.12.2023
ஆண்டுக்கூட்டம் பகுதி2 - 11.11.2023

## பல்கலாச்சார ஒன்றுகூடல் 2023

ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கான ஒன்றுகூடல் 29.10.2023 அன்று நடைபெறும். அன்றைய ஒன்றுகூடலில் லோறன்ஸ்கூக் இல் அமைந்துள்ள மாநகரசபையில் பணியாற்றுபவர்கள் சிலரும் மற்றும் லோறன்ஸ்கூக் தன்னார்வ நிறுவனத்தினரும் தங்கள் தங்கள் பண்பாட்டுடைகளுடன் வருகைதரவுள்ளனர். இதற்கான நிகழ்வாக ஆண்டுவிழாவில் இடம்பெற்ற சில வகுப்பு மாணவர்களின் நிகழ்ச்சிகளையும் எமது பாடசாலை, கலை மற்றும் பண்பாடு பற்றிய விளக்கத்தினை சக தன்னார்வ அமைப்புகளுக்குத் தெரிவிக்கும் முகமாக கலைகள் சார்ந்த கண்காட்சிகளையும் நடாத்தத் திட்டமிட்டுள்ளோம்.

**அடுத்தவாரம் கிழமை எண் 40 இலையுதிர்கால விடுமுறையாக அறிவித்துக்கொள்கின்றோம்.**

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***

நன்றி!

நிர்வாகம்
அன்னை பூபதி லோறன்ஸ்கூக் வளாகம்

தமிழை வளர்க்கப்
பணிபுரிவோம்!